ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ரு’தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ பரிவதில் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பரிவதில் ॥

## ஆராதனைக் கெளியவன்

‡பரிவதில் ஈசனைப் பாடி⋆ விரிவது மேவல் உறுவீர்!⋆
பிரிவகையின்றி நன்னீர் தூய்⋆ புரிவதுவும் புகை பூவே (1)

மதுவார் தண்ணந் துழாயான்⋆ முதுவேத முதல்வனுக்கு⋆
எதுவேதென் பணி என்னாது⋆ அதுவே ஆட்செய்யு மீடே (2)

ஈடும் எடுப்பும் இல் ஈசன்⋆ மாடு விடாதென் மனனே⋆
பாடும் என் நா அவன் பாடல்⋆ ஆடும் என் அங்கம் அணங்கே (3)

அணங்கென ஆடும் என் அங்கம்⋆ வணங்கி வழி படும் ஈசன்⋆
பிணங்கி அமரர் பிதற்றும்⋆ குணங்கெழு கொள்கையினானே (4)

கொள்கை கொளாமை இலாதான்⋆ எள்கல் இராகம் இலாதான்⋆
விள்கை விள்ளாமை விரும்பி⋆ உள் கலந்தார்க்கோர் அமுதே (5)

அமுதம் அமரர்கட்கீந்த⋆ நிமிர் சுடர் ஆழி நெடுமால்⋆
அமுதிலும் ஆற்ற இனியன்⋆ நிமிர் திரை நீள் கடலானே (6)

நீள் கடல் சூழ் இலங்கைக் கோன்⋆ தோள்கள் தலை துணி செய்தான்⋆
தாள்கள் தலையில் வணங்கி⋆ நாள் கடலைக் கழிமினே (7)

கழிமின் தொண்டீர்கள் கழித்துத்⋆ தொழுமின் அவனைத் தொழுதால்⋆
வழி நின்ற வல்வினை மாள்வித்து⋆ அழிவின்றி ஆக்கம் தருமே (8)

தருமவரும் பயனாய⋆ திருமகளார் தனிக் கேள்வன்⋆
பெருமை உடைய பிரானார்⋆ இருமை வினை கடிவாரே (9)

கடிவார் தீய வினைகள்⋆ நொடியாரும் அளவைக்கண்⋆
கொடியா அடு புள் உயர்த்த⋆ வடிவார் மாதவனாரே (10)

www.prapatti.com

‡மாதவன் பால் சடகோபன்⋆ தீதவம் இன்றி உரைத்த⋆
ஏதமில் ஆயிரத்திப்பத்து⋆ ஓத வல்லார் பிறவாரே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com